## அறிவிப்புகள்

1. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இளைஞர்களுக்கு அதிக வேலை வாய்ப்புகளை உருவாக்க வேண்டும் என்று அறிவித்ததற்கேற்பவும் மத்திய கூட்டுறவு வங்கிகளில் பணியாளர் தேவையினை யொட்டியும் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகளில் காலியாக உள்ள 125 உதவி மேலாளர் பணியிடங்கள் நிரப்பப்படும்.

2. அதே போன்று மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகளில் காலியாக உள்ள உதவியாளர் பணியிடங்களில் முதல் கட்டமாக 250 பேர்கள் நியமனம் செய்யப்படுவார்கள். இதில் 75 உதவியாளர் பணியிடங்கள் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகளின் இணைப்பு சங்கங்களான பணியாளர் கூட்டுறவுச் சங்கங்கள், தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகள் போன்றவற்றில் பணியாற்றும் தகுதியுள்ள பணியாளர்களைக் கொண்டு நிரப்பப்படும்.

3. கூட்டுறவு நிறுவனங்களால் நடத்தப்படும் நியாய விலைக் கடைகளில் காலியாக உள்ள 2200 விற்பனையாளர்கள் மற்றும் 300 கட்டுநர்கள் ஆக மொத்தம் 2500 பணியிடங்கள் நிரப்பப்படும்.

4. கூட்டுறவுச் சங்கங்களில் பணியில் இருக்கும் போது இயற்கை எய்திய பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்குத் தகுதியின் அடிப்படையில் வேலை வாய்ப்பு வழங்கப்படும்.

5. தமிழகத்தில் உள்ள அனைத்து கூட்டுறவு மேலாண்மைப் பயிற்சி நிலையங்கள் மூலமாக பல்வேறு கூட்டுறவு வங்கிகளில் பணிபுரியும் பணியாளர்களும் மற்றும் தனி நபர்களும் பயிற்சி பெறும் வகையில் 2006–07ம் ஆண்டில் குறைந்த பட்சம் 3000 நபர்களுக்கு நகை மதிப்பீடும் மற்றும் அதன் நுட்பங்களும் குறித்தான பயிற்சி வழங்கப்படும்.

6. கடந்த ஆட்சியில் 199 தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிகளை கலைப்பதற்கு அறிவிப்பு வழங்கப்பட்டது. அந்த அறிவிப்புகளை ரத்து செய்து இந்த தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளைப் புத்துயிரூட்டி வாழ்திறனுள்ள சங்கங்களாக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

7. ஏற்கனவே கலைக்கப்பட்ட தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளின் செயல் எல்லையில் உள்ள விவசாயபெருங்குடி மக்களின் விவசாயக் கடன் தேவையைப் பூர்த்தி செய்யும் வகையில் அருகில் உள்ள கூட்டுறவுச் சங்கங்கள்

மூலம் விவசாயக் கடன்கள் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இவ்வாறு கலைக்கப்பட்ட தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளின் செயல் எல்லையில் தகுதி மற்றும் தேவையின் அடிப்படையில் புதிய சங்கங்கள் அமைக்க ஏற்பாடு செய்யப்படும்.

8. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பால் தொடக்க வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகளில் கடன் தள்ளுபடி சலுகை பெற்ற விவசாயிகளுக்கு அவர்கள் வங்கிகளில் அடமானம் வைத்துள்ள சொத்துப் பத்திரங்கள் திருப்பி வழங்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. மாண்புமிகு முதல்வர் அவர்களின் ஆணைக்கேற்ப **31.8.2006** க்குள் அனைத்து பத்திரங்களும் திருப்பி வழங்கப்படும். மேற்சொன்னவாறு கடன்தள்ளுபடி சான்றிதழ் பெற்ற, கடன்தாரர்கள் அந்தந்தப் பகுதியிலுள்ள சார்பதிவாளர் அலுவலகத்தை அணுகி சொத்தின் மீதுள்ள அடமானத்தை ரத்துசெய்து சொத்தின் மீதான வில்லங்கத்தை விலக்கிக் கொள்ளலாம்.

9. சிறு வணிகக் கடன் திட்டத்தின் கீழ் தற்போது மகளிர் வணிகக் கடன் வழங்கப்பட்டு வருகிறது. இனி இந்தச் சிறு வணிகக் கடன் திட்டம் சிறு வணிகம் செய்யும் ஆடவர்களுக்கும் பயனளிக்கும் வகையில் விரிவாக்கப்பட்டு வாராந்திரக் கடனாக ரூ.2000/– வழங்கப்படும்.

10. விவசாயிகளின் பயிர்க்கடன் மீதான வட்டிச்சுமையைக் குறைக்க நடப்பு குறுவைப் பருவத்திலிருந்து பயிர்க் கடனுக்கான வட்டி விகிதம் 9 சதவிகிதத்திலிருந்து 7 சதவிகிதமாகக் குறைக்கப் பட்டுள்ளது. இந்த 2 சதவிகித வட்டிக்குறைப்பால் கூட்டுறவு வங்கிகளுக்கு ஏற்படும் இழப்புத் தொகையை அரசே ஏற்று அத்தொகையை தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிகளுக்கு வழங்கும்.

11. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் கூட்டுறவுச் சங்கங்களில் விவசாயிகள் பெற்ற விவசாயக் கடன் அனைத்தும் தள்ளுபடி செய்யப்பட்டுள்ள நிலையில் பண்ணைசாராக் கடன் பெற்றுள்ள வர்களின் கடன் சுமையைக் குறைக்கும் வண்ணம் மத்தியக் கூட்டுறவு வங்கிகள் மற்றும் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளில் பண்ணைச் சாராக் கடன் பெற்று தற்போது நிலுவையிலுள்ள கடன்களுக்கான வட்டி விகிதம் 18 சதவிகிதத்திலிருந்து 12 சதவிகிதமாகக் குறைக்கப்படும். தவணை தவறிய கடன்தாரர்களுக்கு **31.12.2006**க்குள் தவணை தவறிய தொகையை திருப்பிச் செலுத்தும் பட்சத்தில்

மேற்கண்ட வட்டிக்குறைப்புடன், அபராத வட்டி 3 சதவிகிதம் முழுவதுமாக தள்ளுபடி செய்யப்படும்.

12. தொடக்கக் கூட்டுறவு வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகளின் பெண் உறுப்பினர்களின் கடன் பெறும் திறனை அதிகரிக்க ஏதுவாக கூடுதல் பங்கு மூலதனம் பெறுவதற்கு உறுப்பினர் ஒருவருக்கு ரூ 1000/– வீதம் ஐந்து ஆண்டு சம தவணைகளில் திருப்பிச் செலுத்தும் வண்ணம் வட்டியில்லாக் கடனாக 500 மகளிருக்கு மொத்தம் ரூ.5 இலட்சம் நடப்பாண்டில் வழங்கப்படும்.

13. தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளின் பெண் உறுப்பினர்களின் கடன் பெறும் திறனை அதிகரிக்க ஏதுவாக கூடுதல் பங்கு மூலதனம் பெறுவதற்கு உறுப்பினர் ஒருவருக்கு ரூ.500/– வீதம் ஐந்து ஆண்டு சம தவணைகளில் திருப்பிச் செலுத்தும் வண்ணம் வட்டியில்லாக் கடனாக 2000 மகளிருக்கு மொத்தம் ரூ.10 இலட்சம் நடப்பாண்டில் வழங்கப்படும்.

14. நகர மற்றும் புற நகர்ப் பகுதிகளிலுள்ள நகரக் கூட்டுறவு வங்கிகளின் பெண் உறுப்பினர்களின் கடன் பெறும் திறனை அதிகரிக்க ஏதுவாக, கூடுதல் பங்கு மூலதனம் பெறுவதற்கு உறுப்பினர் ஒருவருக்கு ரூ 500 வீதம் ஐந்து ஆண்டு சம தவணைகளில் திருப்பிச் செலுத்தும் வண்ணம் வட்டியில்லாக் கடனாக 1000 மகளிருக்கு மொத்தம் ரூ.5 இலட்சம் நடப்பாண்டில் வழங்கப்படும்.

15. கூட்டுறவு வங்கிகளில் உறுப்பினராக உள்ள உடல் ஊனமுற்ற பெண்களுக்கு அவர்களது கடன் பெறும் திறனை அதிகரிக்க ஏதுவாக, நபர் ஒன்றுக்கு ரூ. 500/– வீதம் ஐந்து ஆண்டு சம தவணைகளில் திருப்பிச் செலுத்தும் வட்டியில்லாப் பங்கு மூலதனக் கடனாக 1000 பெண்களுக்கு மொத்தம் ரூ.5 இலட்சம் நடப்பாண்டில் வழங்கப்படும்.

16. வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களின் விற்பனை நடவடிக்கைகளை மேம்படுத்த தேவையான அடிப்படை வசதிகள் செய்து கொள்ள சங்கம் ஒன்றுக்கு ரூ.4.30 லட்சம் வீதம் அதாவது ரூ.2.10 இலட்சம் கடனாகவும் ரூ.2.20 இலட்சம் மான்ய மாகவும் இரண்டு சங்கங்களுக்கு வழங்கப்படும்.

17. பொது விநியோகத் திட்டத்தின் கீழ் செயல்படும் கூட்டுறவு நியாய விலைக் கடைகளில் மண்ணெண்ணெய் விநியோகத்தை சீராக செயல்படுத்த நடப்பாண்டில் பழுதடைந்துள்ள மண்ணெண்ணெய் பேரல்களுக்குப் பதிலாக புதிய பேரல்கள் வாங்குவதற்கு ரூ.35 இலட்சம் மான்யமாக வழங்கப்படும்.

18. கூட்டுறவு நியாய விலைக் கடைகளில் அத்தியாவசியப் பொருட்கள் சரியான எடையில் வழங்கப்படுவதை உறுதி செய்ய 2000 நியாய விலைக் கடைகளுக்கு நவீன மின்னணு எடை இயந்திரம் வாங்குவதற்கு நடப்பாண்டில் ரூ.1 கோடி மானியமாக வழங்கப்படும். படிப்படியாக அனைத்து நியாய விலைக் கடைகளிலும் இத்திட்டம் நிறைவேற்றப்படும்.

19. பணியாளர் கூட்டுறவு சிக்கன மற்றும் நாணய சங்கங்களில் தனி நபர் கடன் உச்ச வரம்பு தற்போதுள்ள ரூபாய் இரண்டு இலட்சம் அளவிலிருந்து ரூபாய் மூன்று இலட்சமாக உயர்த்தப்படும்.

20. கூட்டுறவுச் சங்கங்களின் செயல் பாடுகளை வெளிப்படையாக பொதுமக்கள் தகவல் அறியும் வண்ணம் நடப்பாண்டில் தொடுதிரை தகவல் அறியும் கணினிகள் அனைத்து மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கிகளிலும் அமைக்கப்படும்.

21. சென்னை மத்தியக் கூட்டுறவு வங்கிக் கிளைகள் ரூ 53 இலட்சம் செலவில் கணினி மயமாக்கப்படும்.

22. கூட்டுறவு வங்கிகள் அனைத்தும் கணினி மயமாக்கப்படுவதோடு கூட்டுறவுத் துறையும் படிப்படையாக கணினி மயமாக்கப்படும்.

23. கூட்டுறவுச் சங்கங்களின் ஆய்வு முறைகளை நெறிப்படுத்தி கடன் வழங்கல் மற்றும் நியாய விலைக் கடைகளின் ஆய்வினை தீவிரப்படுத்தும் வகையில் வாகன வசதி இல்லாமல் இருந்த 2 மண்டல இணைப் பதிவாளர்கள் மற்றும் 19 துணைப் பதிவாளர்களுக்கு முறையே இரண்டு அம்பாஸிடர் சீருந்து மற்றும் 19 ஈப்புகள் எண்பத்தியேழு இலட்சத்தி தொண்ணூற்றி ஐந்து ஆயிரம் ரூபாய் (ரூ.87.95 இலட்சம்) செலவில் வழங்கப்படும்.

24. 1996ம் ஆண்டில் கூட்டுறவுகளுக்கான தேர்தல் நடத்தப்பட்டது. அப்போதைய அரசு 2001ம் ஆண்டு மே திங்களில் கூட்டுறவுச் சங்கங்களின் நிர்வாகக் குழுவினை ஒட்டு மொத்தமாக கலைத்து விட்டு, தனி அலுவலர்களை நியமித்தது. கூட்டுறவுச் சங்கங்களில் புதிய உறுப்பினர்களை தனி அலுவலர்கள் சேர்க்க வழிவகை செய்ய பிரிவு 89(A) என்ற ஒரு புதிய பிரிவினை கூட்டுறவுச் சட்டத்தில் சேர்த்து 2001 ஜூன் திங்களில் ஒரு அவசரச் சட்டத்தினை முந்தைய அரசு பிறப்பித்தது. இப்புதிய சட்டப் பிரிவினை எதிர்த்து தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளில் சென்னை உயர்நீதி மன்றத்தின் மூன்று நீதிபதிகளைக் கொண்ட குழு புதிதாக சேர்க்கப்பட்ட மேற்படி சட்டப்பிரிவு 89(A) செல்லாது என

தீர்ப்பளித்தது. இதனை எதிர்த்து உச்சநீதிமன்றத்தில் முந்தைய அரசால் மேல்முறையீடு செய்யப்பட்டது. அந்த மேல் முறையீட்டினைத் திரும்பப்பெற்று உயர்நீதி மன்றத்தின் தீர்ப்பினையொட்டி தனி அலுவலர் நியமனத்திற்கு முன்பாக அதாவது 25.5.2001க்கு முன்னர் உள்ள உறுப்பினர்களின் அடிப்படையில் கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தேர்தல் நடத்திட இவ்வரசு நடவடிக்கைகள் மேற்கொள்ளும்.

25. நடப்பாண்டில் ஒரு இலட்சம் மகளிருக்கு புதிய சுய உதவிக் குழுக்கள் மூலம் கூட்டுறவு வங்கிகளால் கடன் வழங்கப்படும்.

26. கூட்டுறவு வங்கிகளில் கடன் வழங்கப்படும் வழிமுறைகளை மேலும் எளிதாக்க உயர்மட்டக் குழு ஒன்று அமைக்கப்படும்.

27. கூட்டுறவு வங்கிகளில் பெறப்படும் பயிர்க்கடனுக்கான காப்பீட்டுத்திட்டத்தில் மாறுதல் செய்து அனைத்து பயிர்களுக்கும் காப்பீட்டை நீட்டிக்கும் வகையில் அரசுக்கு ஆலோசனை வழங்க வல்லுநர்கள் கொண்ட குழு ஒன்று நியமிக்கப்படும்.

28. ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்டம் ஏற்கனவே செயல்படுத்தப்பட்ட 14 மாவட்டங்கள் நீங்கலாக இதர மாவட்டங்களில் படிப்படியாக செயல் படுத்தப்படும்.

29. தமிழக அரசு, இந்திய ஆட்சிப்பணி மற்றும் அகில இந்திய பணிகளுக்கான தேர்வுக்கு, ஏற்கனவே நடத்தி வரும் பயிற்சித் திட்டங்களில் சேர்ந்து படிப்பதற்காக கூட்டுறவுச் சங்கங்களின் உறுப்பினர் களின் வாரிசுகளுக்கு நிதியுதவி வழங்கப்படும்.

30. கடந்த ஆட்சியிலே நியாயவிலைக் கடைகளின் காலிச் சாக்குகள் விற்பனையில் ஒரு மாவட்டத்திற்கு ஒரே விலை என்று நிர்ணயம் செய்யப் பட்டிருந்தது. ஆனால் இந்த ஆட்சி பொறுப்பேற்றவுடன் இந்த முறையை மாற்றிவிட்டு சரக வாரியாக காலிக் கோணி விற்பனைக் குழு அமைத்து திறந்த முறை ஒப்பந்தபுள்ளி மற்றும் பகிரங்க ஏல முறையில் சாக்குகள் விற்பனை செய்யப்படவேண்டும் என்று ஆணையிட்டது. இப்புதிய முறையின் காரணமாக இன்றைய நிலவரப்படி கணக்கிட்டால் சாக்கு ஒன்றுக்கு ரூ.2 முதல் ரூ.4 வரை அதிகமாகக் கிடைப்பதால், ஆண்டொன்றுக்கு ரூ. 5 கோடி முதல் ரூ. 8 கோடி வரை கூட்டுறவுச் சங்கங்களுக்கு கூடுதலாக வருமானம் கிடைக்குமென்று எதிர்பார்க்கப்படுகிறது.